–அது செய்யப்படும். அதுபோல ஆழியார் நகர் மருத்துவமனையில் ஒரு மருத்துவர்தான் இருக்கிறார் என்று கூறினார். 213 ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் ஒரு மருத்துவர்தான் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார், அது இரண்டாக தரம் உயர்த்தப்படும் என்று இந்த நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையிலே வெகுவிரைவில் இன்னொரு மருத்துவர் கூடுதலாக நியமிக்கப்படுவார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். 24 மணி நேரமும் பிரசவ சேவை அந்த மருத்துவமனையில் இருக்கின்றது. காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரையில் புற நோயாளிகள் பிரிவு மருத்துவ சிகிச்சைக்காக செயல்பட்டு வருகிறது. மேலும் கூடுதல் வசதி வேண்டுமென்றால் செய்து தருவோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 85, மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

85—

கால்நடை மருத்துவமனை

***38717—திரு. எச். வசந்தகுமார்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குநேரி தொகுதி, நாங்குநேரி ஊராட்சி ஒன்றியம், பரப்பாடியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி ஒன்றியத்தைச் சார்ந்த பரப்பாடி கிராமத்தில் புதிதாக கால்நடை மருத்துவமனை ஏற்படுத்த அரசுத் தரப்பில் செயற்குறிப்பு

2010 ஏப்ரல் 23]

ஏதுமில்லை. நாங்குநேரி ஊராட்சி ஒன்றியத்தில் இரண்டு கால்நடை மருந்தகங்கள் செயல்பட்டு வருகின்றன. அங்கு நேரடியாக புதிய கால்நடை மருத்துவமனை அமைக்க தற்போது வாய்ப்புகள் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார்.

திரு. எச். வசந்தகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் நாங்குநேரி தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதி. சரியாகத் தண்ணீரும் கிடைப்பது இல்லை, அதனால் விவசாயமும் நடப்பது இல்லை. அங்கே இராமகிருஷ்ணாபுரம் பஞ்சாயத்தில் சடையநேரி, சலவைக்காரன்குளம் மற்றும் ஆனிக்குளம், பாப்பான்குளம், பொத்தையடி; இடப்பாடி ஊராட்சியில் ஏமன்குளம், புதுக்குளம்; இளங்குளம் ஊராட்சியில் பரப்பாடி, தாமரைக்குளம், திருவட்டாறு, வேப்பன்குளம், கல்மாணிக்கபுரம்; சங்கனாபுரம் பஞ்சாயத்தில் சிவந்தியாபுரம், தெற்கு விஜயநாராயணபுரம், பட்டரைப்பட்டிவிளை, மன்னார்புரம் என்று ஏராளமான கிராமங்களில் அதிகமாகக் கால்நடைகளை வளர்த்து அவர்கள் அன்றாட வாழ்க்கையை இன்று உயர்த்திக் கொண்டிருக்கின்றார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அத்தனை கிராமங்களிலும் இருக்கின்ற அந்த யாதவ குல மக்களின் நலனைக் கருதி தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களிடமும், துணை முதல்வர் அவர்களிடமும் சொல்லி எங்களுக்கு நீங்கள் கண்டிப்பாக ஒரு கால்நடை மருத்துவமனையை அமைத்துத் தர வேண்டுமென்று நமது மாண்புமிகு பேரவைத் தலைவர்மூலம் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை பராமரிப்புத் துறை, அந்தந்தப் பகுதியில் உள்ள கால்நடைகளின் எண்ணிக்கையைப் பொறுத்து, கால்நடை கிளை நிலையம், கால்நடை மருந்தகம், கால்நடை மருத்துவமனை போன்றவற்றை அமைத்து வருகிறது. ஒரு கிராமத்தில் கால்நடை அலகுகளின் எண்ணிக்கை 3,000–க்கு மேல் இருக்குமானால் அங்கு கிளை நிலையமும், 10,000–க்கு மேல் இருக்குமானால் அங்கு மருந்தகமும் அமைத்துத் தரப்படுகிறது.

மேலும், உறுப்பினர் அவர்கள் கோரும் கால்நடை கிளை நிலையத்திற்கும், மற்ற கால்நடை கிளை நிலையங்களுக்கும் இடையே உள்ள தொலைவையும் கணக்கிட்டு, எதிர்காலத்திலே நிதிநிலையை அனுசரித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை முன்னுரிமை அடிப்படையிலே இந்த அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார்.

திரு. எச். வசந்தகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அத்தனை கிராமங்களிலும் ஏறத்தாழ 5,000–லிருந்து 7,000 கால்நடைகள் இருக்கின்றன. இன்று பால் தேவையும் அதிகமாக இருப்பதால், நோய் தாக்காமல் இருப்பதற்கும், அவற்றைப் பராமரிப்பதற்கும் கண்டிப்பாக தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களிடம் நீங்கள் உத்தரவு பெற்று அதை அமைத்துத் தர வேண்டும். அப்படி அமைத்துத் தந்தால், நாங்குநேரி மக்கள் மத்தியில் சட்டமன்றத்திலே வசந்தகுமார் எங்களுக்காகப் பேசினார் என்ற ஒரு புகழும் எனக்குக் கிடைக்கும் என்று நமது மாண்புமிகு பேரவைத் தலைவர்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 9–45

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை இந்த அரசு பரிசீலித்து உரிய நடவடிக்கைகளை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 86, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ. சுப்பிரமணியம், மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

86—

சுற்றுலாத் தலம்

***91279—திரு. ஓ. சுப்பிரமணியம்:**

மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—